Vol. 9 No. 2 January 2025 E-ISSN: 2456-5571

# நெடுநல்வாடையும் தமிழர் கலைகளும்

முனைவர் பீ. பெரியசாமி
*உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை*
*டாக்டர் எம்.ஜி.ஆர். சொக்கலிங்கம் கலைக் கல்லூரி*
*ஆரணி, திருவண்ணாமலை*

**ஆய்வுச்சுருக்கம்**

*சங்கத் தமிழர் கலைகளில் சிறந்து விளங்கினர் என்பதை நெடுநல்வாடை எனும் நூலை அடிப்படையாகக் கொண்டு ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இக்கட்டுரையின் வழி தமிழர்களின் கலை, கலைநுட்பங்கள், கட்டிடத்திற்கு இடத்தேர்வுமுறை, மூதூர் அமைப்பு, அரண்மனை அமைப்பு, முற்றம் அமைப்பு, முன்வாயில் அமப்பு, நீர் விழும் குழாய் அமப்பு ஆகியவற்றின் வழி தமிழர் கட்டிடக்கலை திறனையும், பொறியியல் வல்லுநர்கள் இருந்துள்மையையும் அறியமுடிகின்றது. ஓவியக்கலை, பாசறை அமைப்பு, தச்சர்களின் இயல்பு, சிற்பம், வட்டக்கட்டில் அமைப்பு, படுக்கையின் சிறப்பு, ஒப்பனை கலை ஆகியவற்றின் வழி நுன்கலைகளை அறியமுடிகின்றது. கைத்தொழில், புழங்கு பொருட்கள் பயன்பாடு ஆகியவற்றின் வழி கைத்தொழில் சிறந்திருந்தை அறிமுடிகின்றது. யானையை அழகுபடுத்துதல் வழி தான் மட்டும் அழகாய் இருந்தால் போதாது தன்னோடு இருக்கும் விலங்குகளும் அழகாக இருக்க வேண்டும் என நினைத்த உயர்ந்த உள்ளம் வெளிப்படுகிறது. யாழ் கருவியின் மூலம் இசையைத் தமிழர்கள் வளர்த்துள்ளனர். அந்த யாழ் இசைக்கருவியின் இயல்பை நெடுநல்வாடை கூறுகின்றது. யவன விளக்குகள் பயன்படுத்தினர் என்பதன் வழி யவனத்திற்கும் தமிழகத்தற்கும் இடையேயான வணிகத் தொடர்பு அறிந்துக்கொள்ள முடிகின்றது. இவைகள் மட்டுமன்றி பல்வேறு கலைக்கூறுகள் நெடுநல்வாடையில் இடம்பெற்றுள்ளதை இக்கட்டுரை ஆராய்ந்துள்ளது.*

*முக்கியச்சொற்கள்: கலைகள், நெடுநல்வாடை, சங்ககாலம், கட்டிடக்கலை, ஓவியக்கலை, சிற்பக்கலை, புழங்குப்பொருட்கள்*

## முன்னுரை

கலைகள் என்பவை நம் கண்களுக்கும் செவிகளுக்கும் விருந்தளிப்பவை மட்டுமன்று. அவைகள், நம் பண்பாடு கலாச்சாரம், அறிவியல், தொழில்நுட்பம், நாகரிகம் போன்றவற்றை வெளிப்படுத்துபவை. எனவே தான் கலைகள் காலத்தால் அழிக்க முடியாத ஆவணங்களாகின்றன. இன்று நம் முன்னோர்களின் வரலாற்றை ஆராய்ந்து அறிவதற்கு உறுதுணையாய் இருக்கும் பல்வேறு ஆவணங்களுள் முக்கியமானவைகளாக இருப்பவை தொல் பொருட்களேயாகும். அவ்வாறு கிடைக்கும் தொல்பொருளில் கிடைக்கும் கலைபொருட்களே முக்கியமானவைகளாகும். எனவே கலைகள் என்பவை காலத்தை கடந்து நிற்கும் தன்மையும் வரலாற்றை எடுத்தியம்பும் ஆற்றலும் கொண்டவையாகும். அதனடிப்படையில் சங்க இலக்கிய பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்றான நெடுநல்வாடையின் வழி தமிழர் கலைகளின் மேன்மையும் தன்மையும் குறித்து இக்கட்டுரை ஆராய்ந்து தமிழர் கலைநுட்பத்தை வெளிக் கொணர முற்படுகிறது.

## கலை

கலை என்பது கலைஞனின் கைவண்ணத்தில் உருவாகி நம் கண்களையும் உணர்வுகளையும் உண்ணத நிலைக்கு இட்டுச்செல்வது. இக்கலையின் தோற்றம் இக்காலம் என அறுதியிட்டுச் சொல்ல இயலவில்லை. ஏனெனில் மனித உயிர் தோன்றம் பெற்ற உடனே

கலைகள் தோற்றம் பெற்றன. ஒவ்வொரு மனிதனும் தன் உணர்ச்சியை வெளிப்படுத்தும் பாண்மையே கலையாகும். இதனை, *மனிதனுடைய நல்வாழ்விற்கு உதவுகின்ற எல்லா தொழில்களையும் கலைகள் என்று கூறலாம்.* (வேங்கடசாமி, மயிலை. சீனி, ப.22) என்றும், *மனிதனுடைய மனதில் உணர்ச்சியை எழுப்பி அழகையும் இன்பத்தையும் அளிக்கின்ற பண்பு அழகுக் கலைகளுக்கு உண்டு.* (வேங்கடசாமி, மயிலை. சீனி, ப.23) என்றும் மயிலை சீனி. வேங்கடசாமி கூறுவதிலிருந்து அறிந்து கொளளலாம். மேலும் கலைகள் மக்களிடம் இரண்டற கரந்து அவர்களின் வாழ்வியலுக்கு அழகு சேர்த்தன என்பதை நமக்கு நெடுநல்வாடை பெரிதும் எடுத்தியம்புகின்றது என்பதை, *சங்ககாலம் தொட்டுக் கட்டிட வளர்ச்சி, கோயில் கட்டடங்கள், மண்டபம், தூண் போன்றவை மக்களின் வாழ்வியலோடு ஒன்றாகக் கலந்து அவற்றின் பண்பாட்டு மரபுகள் வளர்ச்சி அடைந்திருப்பதையும் அறிந்துக் கொள்வதற்கு பெருந்துணையாக (நெடுநல்வாடை) நின்றது.* (ராஜேஷ். பா, ISSN: 2582-9513) என்பதன் வழி அறிந்துக்கொள்ள முடிகின்றது.

### அழகுக்கலைகள்

அழகுக்கலை என்றாலே இப்போதெல்லாம் நம் நினைவுக்கு வருவது அழகுநிலையங்கள் தான். அவையும் அழகுக்கலைதான் இல்லையென்று சொல்லிவிட முடியாது. இருப்பினும் சங்க காலத்தில் அழகுக்கலை என்பது,

1. கட்டடக்கலை
2. சிற்பக்கலை
3. ஓவியக்கலை
4. இசைக்கலை
5. காவியக்கலை (வேங்கடசாமி, மயிலை. சீனி, ப.24)

என வகைப்படுத்துவார் மயிலை. சீனி. வேங்கடசாமி.

### கட்டிடம் கட்ட இடம் தேர்ந்தெடுத்தல்

கட்டிடம் கட்டுவதற்கு இடம் தேர்ந்தெடுத்தலில் கூட தமிழர் தங்கள் தொழில்நுட்ப திறனையும் அறிவியல் அறிவையும் பயன்படுத்தியுள்ளனர். ஒரு கட்டிடம் கட்டுவதற்குரிய மனை எவ்வாறு தேர்வு செய்ய வேண்டும் என்பதை,*மனைக்கென தேர்வு செய்யப்பட்ட இடத்தில் உள்ள மண்ணின் மணம், சுவை, பரப்பு ஆகியவற்றை ஆராய்ந்துப்பார்த்து வசிப்பிடம் அமைக்கும் நுட்பத்தையும் பழந்தமிழர் அறிந்திருந்தனர். குதிரை, யானை, மூங்கில், வீணை, கடல் இவற்றினுடைய நாதம் போன்றதும், புன்னை, ஜாதி, முல்லை, தாமரை போன்ற மலர்களின் மணமுடையதும் ஒரே நிறமும் அழுத்தமானதும், ஈரமானதும், தொட்டால் இதமானதுமான மண்ணும், வில்வம், வேம்பு, நொச்சி போன்ற மரங்கள் வளர்ந்ததும் அறுசுவைகள் உள்ளதுமான மனைகள் கட்டுமானத்திற்கு ஏற்றது எனவும், தயிர், நெய், தேன் போன்ற மணமுள்ள மனைகள் ஏற்றதல்ல எனவும் பழந்தமிழ் கட்டிடக்கலை நூல் கூறுகின்றது.* (இராசேந்திரன். பொ, சாந்தலிங்கம். சொ, ப.137) என இராசேந்திரன் கூறியுள்ளார்.

### கட்டிடக்கலை

கட்டு + இடம் = கட்டடம், கட்டிடம் என்னும் சொல்லுக்குரிய அதே பொருளில்மயக்கி கட்டடம் என்ற சொல் தமிழ்ப் பேரகராதியில் எவ்வாறோ இடம்பெற்றதால் 'கட்டட' எனும் சொல்லாட்சி இன்று தமிழில் அதிகமாகக் காணப்படுகிறது. எனினும் 'கட்டிடம்' என்பதே சரியான சொல்லாகும். கட்டிடங்களின் வடிவமைப்பு மற்றும் கட்டிடப்பணி இவற்றுக்கானக் கலை மற்றும் தொழில்

நுட்பமேகட்டிடக்கலை என்பது தெளிவு. மேலும், கட்டிடக்கலை நடைமுறை என்பது பரந்த இடத்தின்ஒட்டுறவுகள், கட்டிட அமைப்பு, ஒரு குறிப்பிட்ட சூழலுக்குள் நிலவ வேண்டிய இணக்கமான நடவடிக்கைகள், கட்டிடப் பொருள்களின் ஒருங்கமைவு மற்றும் தோற்றம், பொலிவு ஆகியவற்றைக்கட்டுமான ஒருங்கமைவுகளின் தன்னியல்பான திட்டத்திலிருந்து மாறுபடுத்தி வலியுறுத்துகிறது என்கிறது பிரிட்டானிக்கா தகவல் களஞ்சியம்.

சங்ககால தமிழ் மக்கள் இயற்கையோடு இணைந்து பல கலைநுட்பங்களையும் தொழிற்நுட்பங்களையும் அறிந்திருந்தனர். அவர்கள் இன்றைய தொழிற்நுட்ப வளர்ச்சியைக் காட்டிலும் அதிநவீன வளர்ச்சியை எட்டியிருந்தனர். இதனை, *பழந்தமிழர் வாழ்க்கை இயற்கையோடு இணைந்தே இருந்தது. அவர்தம் வீடுகள் காலநிலைக்கு ஏற்ற வகையில் கட்டப்பட்டிருந்தன. கோடையில் வெப்பத்தைப் போக்க, வீடுகளின்உயர்மாடம், மேற்பகுதிக் கூரையின்றி அமைக்கப்பட்டிருந்தது. வீடுகளின் உட்பகுதியில் காற்றுவரும் பான்மையில் பல கணிகளுடன் கூடிய முறைமையும் இருந்தது. குளிர்காலத்தில் தென்றல்வரும் பலகணிகளைத்திறவாது மக்கள் அடைத்தே வைத்திருந்தனர்.* (A. Deepak, Tamil Architecture Technology, 7-12.) என்கிறார் தீபக்.

கட்டடக்கலை மற்ற கலைகளைக் காட்டிலும் தலைசிறந்து என்பதை, *கட்டடக்கலை ஒரு சமூகக் கலையாகும். எந்தக் கலையாயினும் சமூக நோக்கம் கொண்டுதான் இருக்க வேண்டும் என வாதிடப்பட்டாலும் கட்டடக் கலை அக்கலைஞனுக்கு வரையறைகளைக் கொடுக்கிறது. அத்தகையே வரையறைகளைச் சிற்பியோ ஓவியனோ கூடப் பெறுவதில்லை.* (நா.பார்த்தசாரதி,ப5) என்கிறார் நா. பார்த்தசாரதி.

கட்டிடக்கலை என்பது ஒவ்வொரு நாட்டிற்கும் ஒவ்வொரு சமூகத்திற்கும் வெவ்வேறான அமைப்பினைக் கொண்டுள்ளது என்பதை, *கட்டிடக்கலையின் அடிப்படைத்தன்மை மற்றும் தேவை ஒரே விதமாக இருந்தாலும் ஒவ்வொரு நாட்டின் இயற்கை அமைப்பு தட்ப வெட்பநிலை சுற்றுச்சூழல், மக்களின் பழக்க வழக்கங்கள், மனோபாவம், சமயக்கொள்கை போன்றவற்றின் அடிப்படையில் வெவ்வேறு விதமாக உருவடைந்திருக்கின்றன.* (கிங்ஸ்லி தே ஜோஸ். சி., ISSN:2582-9513) என்கின்றனர். எனவே, கட்டிடக்கலை என்பது தனித்துவமாக அக்கட்டிடத்தை உருவாக்கிய கலைஞனின் மனநிலையையும் அவன் கவித்துவத்தையும் அக்கட்டிடத்தின் உரிமையாளரின் உணர்வுகளையும் அழகுணர்ச்சியையும் வெளிப்படுத்துவனவாகவே இக்கட்டிடக்கலைஅமைந்துள்ளது.

சங்க காலத்தில் கட்டிடக்கலையில் சிறந்த வல்லுநர்கள் இருந்துள்ளனர் என்பதை,

"நூலறி புலவர் நுண்ணிதின் கயிறிட்டு
தேஎம் கொண்டு தெய்வம் நோக்கிப்
பெரும்பெயர் மன்னர் கொப்ப மனைவகுத்து"
(நெடுநல். 76-78)

என்று நெடுநல்வாடைப் பாடல் வரிகளின் மூலம் அறிய முடிகின்றது. மேலும், கட்டடகலை சார்ந்த நூல்கள் தமிழில் இருந்துள்ளன என்பதை, "நூல்வழி பிழையா ஊர்" (மதுரை.646) நூலில் சொன்னபடி அமைக்கப்பட்ட ஊர் எனும் மதுரைக்காஞ்சி பாடல்வழி அறிய முடிகின்றது. மேலும்,

"அகல் இரு விசும்பின் பாயிருள் பருகிப்
பகல் கான்று எழுதரும் பல்கதிர்ப் பருதி"
(பெரும்.பாண்.1-2)

என்பதன் வாயிலாகவும் அறியமுடிகின்றது.

"வானுற நிவந்த மேனிலை மருங்கின்
வேனிற் பள்ளித் தென்வளி தரூஉம்
நேர் வாய்க் கட்டளை திரியாது தின்னிலைப்
போர்வாய் கதவம் தாழொடு துளப்பக்"
(நெடுநல். 60-63)

வானத்தைத் தீண்டும்படி உயர்ந்திருக்கும் மேல் மாடத்தில் தென்றல் காற்றானது நேராக வீசுகின்ற இளவேனில் காலத்தில் உறங்கும் படுக்கையறையிலுள்ள பலகணியில் உலாவுவதைத் தவிர்த்தனர். பலகணியின் வலிமைமிக்க நன்டு பொருந்துகின்ற கதவுகளும் தாழிட்டுக் கிடந்தன என்பதிலிருந்து அடுக்குமாடி வீடுகள் சங்ககாலத்திலேயே கட்டப்பட்டிருந்தன என்பதையும் அறியமுடிகின்றது.

"கை புனைந்து இயற்றாக் கவின்
பெறுவனப்பு" (திருமுருகு.17)

என இயற்கையைத் திருமுருகாற்றுப்படையில் வருணித்த அதே நக்கீரர் பத்துப்பாட்டில் தம்முடையமற்றொரு பாட்டாகிய நெடுநல்வாடையில் செயற்கைக் கலையாகிய கட்டிடக்கலை பற்றிக்குறிப்பிடுகிறார். இக்காரணத்தால் அறிஞர்கள் நெடுநல்வாடையைக் கட்டிடக்கலை நூல் என்னும்பொருள்படுகிற சிற்பப்பாட்டு என்றே கூறுகின்றனர்.

## பொறியியல் வல்லுநர்

சிற்ப நூலை (கட்டிடக்கலை நூலை) நன்கு நுணுக்கமாக அறிந்த புலவர்கள் நூலை நேரேபிடித்துத் திசைகளை மாறாது குறித்துக்கொண்டு அவ்வத் திசைகளில் நிற்கும் தெய்வங்களையும்குறைவறப் பார்த்து அரச மரபினருக்கு ஏற்ப மனையை வகுத்தனர் என்கிறார் நக்கீரர்.நூலைப்பிடித்து அளவும் திசையும் பார்க்கும் வழக்கம் இன்றும் கொத்தனார்களிடையேஉள்ளது. *வாயுமூலை, ஈசானியமூலை, அக்கினிமூலை, நிருதிமூலை* (முருகு ராஜேந்திரன், மனையடி சாஸ்திரம், ப.82) என்று மனைநூலில் திசைகளும்தெய்வங்களும் கூறப்படுவது இங்கே நினைவுகூரத் தக்கது. இப்பகுதிக்கு உரை எழுதுங்கால் உச்சிமேற் புலவர் கொள்நச்சினார்க்கினியர் 'மனை வகுத்து" என்பதற்கு மட்டும், "*மனைகளையும் வாயில்களையும் மண்டபங்கள் முதலியவற்றையும்கூறுபடுத்தி*" (நச்சினார்க்கினியர் (உரை), நெடுநல்வாடை, ப.385) என்று பதசாரம் எழுதுகிறார். தமிழர்கள் தங்கள் மனைகளை அளப்பதற்கு பல்வேறு அளவைகளைப் பயன்படுத்தினர் என்பதை,*தமிழக மக்கள் நீட்டளலவை, நிறுத்தலளவை, முகத்தலளவை என்று மூன்று அளவைகளுக்கும் பழங்காலந்தொட்டே தனித்துவமான அளவை முறைகளைக் கொண்டிருந்தனர்*. (தனலட்சுமி. ச, ISSN:2582-9599) எனும் தனலட்சுமி அவர்களின் கூற்றின் வழி அறிய முடிகின்றது.

## மூதூர் அமைப்பு

நெடுநல்வாடை மாடங்கள் உயர்ந்திருந்தும் வளமையுடைய மூதூரில் ஆறு செல்வது போன்ற அகன்ற தெருக்கள் இருந்தன என்பதை,

"மாடம் ஒங்கிய மல்லல் மூதூர்
ஆறு கிடந்தன்ன அகல்நெடுத் தெருவில்"
(நெடுநல் 29-30)

எனும் அடிகளில் கூறியுள்ளது. இதனை,

"யாறு கிடந்தன்ன அகல்நெடுத் தெருவில்"
(மலைபடு.359)

என்கிறது மலைப்படுகடாம்.

## பாசறை அமைப்பு

பாசறைஎன்பதன் பயனாக, *போர்க்காலங்களில் வீரர்களும், அரசனும் தங்கியிருக்கவும் படைக்கருவிகளை பாதுகாப்பாக வைக்கவும்*

*இப்பாசறை பயன்படுகிறது*. (டயானா ஜெயந்தி மோ, ஜெயஸ்ரீ கு.ச., DOI:10.34256/irjt22234) என்கிறார் டயானா ஜெயந்தி. இதுமட்டுமல்லாமல் பாசறையில் அரசன் போர் வீரர்களையும் யானை, குதிரை போன்றவற்றையும் சந்திப்பதாகவும் அடுத்தநாள் போருக்குரிய திட்டங்கள் வகுக்கப்படல் உள்ளிட்டவை அங்கு செயல்படுவதாகவும் நெடுநல்வாடை எடுத்துரைக்கின்றது.

### அரண்மனை அமைத்தல்

"விரிகதிர் பரப்பிய வியல்வாய் மண்டிலம்
இருகோல் குறிநிலை வழுக்காது குடக்குஏர்பு
.......................................................
தேஎம் கொண்டு தெய்வம் நோக்கி
பெரும்பெயர் மன்னர்க்கு ஒப்ப மனைவகுத்து" (நெடுநல் 73-78)

சூரியன் அகன்ற இடத்தில் விரிந்த கதிர்களைப் பரப்பும். அச்சூரியன் மேற்குநோக்கி உயர்த்து எழுந்து ஒருபக்கம் நிழர் சாராத வேளையில் இரு கோலினை நட்டு அதன் நிழல் மாறுபடாது நிற்கின்ற நண்பகல் பொழுதில் கட்டடக்கலை பற்றிய நூல்களைக் கற்றுத் தேர்ந்தோர். நுட்பமாக நூல் பிடித்துப் பார்த்து திசைகளைத் தெரிந்து அத்திசைக்குறிய தெய்வங்களையும் கருத்தில் கொண்டு மாபெரும் புகழ்பெற்ற மன்னன் வாழ்வதற்குரிய வகையில் அரண்மனை அமைக்கப்பட்டது.

### அரண்மனை வாயில்

"ஒருங்கு உடன் வளைஇ ஓங்குநிலை வரைப்பின்" (நெடுநல் 79)

அரண்மனையில் அனைத்துப் பகுதிகளை ஒருசேர வளைத்து உயர்ந்த நிலையினையுடைய மதிலை அமைத்தனர். மேலும், "அணங்குடை நெடுநிலை"(மதுரை.353) என்கிறது மதுரைக்காஞ்சி.

### கதவுகள்

"பருஇரும்பு பிணித்து செவ்வரக்கு உரீஇ
துணைமாண் கதவம் பொருத்தி இனைமாண்டு
.................................................
வென்றுஎழு கொடியொடு வேழம் சென்றுபுக
குன்று குயின்றன்ன ஓங்குநிலை வாயில்" (நெடுநல் 80-88)

மதிலின் நிலையோடு பருத்த இரும்பால் இணைக்கப்பட்ட செம்மையான அரக்கு வண்ணம் தோய்ந்த இரண்டாக அமைந்த கதவுகளைப் பொருத்தினர். அவைகள் நிலையோடு பொருந்தி இடைவெளி இன்றி நன்கு அமைந்தன. மதிலினுடைய கதவுகள் உத்திரமென்ற விண்மீனின் (நட்சத்திரத்தின்) பெயரமைத்த வலிமையான மரத்தால் செய்யப்பட்டன. அக்கதவுகளில் அலரும் பருவத்து குவளை அரும்பு இதழ் விரித்ததைப் போன்ற அமைப்புடன் புதுமை மிளிருமாறு செய்யப்பட்ட கைப்பிடிகள் பொருத்தமாக அமைத்திருந்தனர். கதவுகள் தச்சனின் கைவண்ணத்தால் உளி இடைவெளி இன்றி அமைந்திருந்தன. வாயிலின் உயர்ந்த நிலையில் வெண்கடுகினை அரைத்துப் பூசி நெய் தடவி இருந்தனர் வெற்றிக்கொடி தாங்கி வரும் யானைகள் நுழைறுமாறு அகன்ற எயர்ந்த நிலையுடையதாய் அரண்மனை வாயில் அமைக்கப்பட்டிருந்து. இதனை.

"தொல்வலி நிலைஇய அணங்குடை நெடுநிலை
நெய்படக் கரிந்த திண்போர்க் கதவின்" (மதுரை.353)

எனும் மதுரைக்காஞ்சி அடிகளோடு ஒப்பிடலாம்.

### முற்றம்

அரண்மனை முற்றத்தில் புதுமணலானது பரப்பப்பட்டிருந்தது. இது திருமகன்

நிலைபெற்றிருக்கும் தன்மையுடையது. குற்றமற்ற சிறப்பினை பெற்றது செல்வம் நிறைந்திருக்கக் கூடியது. இதனை,

"திருநிலை பெற்ற தீதுதீர் சிறப்பின்
திருமணல் ஞெமிரிய திருநகர் முற்றத்து" (நெடுநல்89-90)

"திரு வீற்றிருந்த தீதுதீர் நியமத்து" (திருமுருகு. 70)

"நிலவுப் பயன் கொள்ளும் நெடுநிலா முற்றத்து" (சிலம்பு.4: 32)

எனும் பாடலடிகள் வழி அறிய முடிகின்றது.

முன்வாயில்

அரண்மனை வாயின் முன் பகுதியானது நீண்ட மயிரினைக்கொண்ட கவரிமானின் வெண்மையான நிறத்தினைக் கொண்ட ஏறு குறுகிய அழகினை உடையது.இதனை,

"நெடுமயிர் எகனத் னூநிற ஏற்றை
குறுங்கால் அன்னமொடு உகளும் முன்கடை" (நெடுநல் 91-92)

"............................வானின்,
வயங்குசிறை அன்னத்து நிறைபறை கடுப்ப"(அகம்.334)

என்பவற்றின் வழி அறியலாம்.

நீர் விழும் குழாய்

சங்கத் தமிழர் நீர் வெளியேற்றுவதற்கு குழாய்களை பயன்படுத்தும் தொழில்நுட்பத்தை அறிந்து வைத்தருந்துள்ளனர். இதனை,

"கலிந்துவீழ் அருவிப் பாடுவிறந்து அயல்"
ஒலிநெடும் பீலி ஒல்க மெல் இயல்" (நெடுநல் 97-98)

எனும் பாடலடி வழி மகரமீனின் வாய் போல பிலிந்த வாயினைக்கொன்ட நீர் விழும் குழாயிலிருந்து நீர் விழுதின்ற ஓசையானது அருவி விழும் ஓசையினை ஒத்திருந்தது என்பதால் அறியமுடிகின்றது.

கலைப்பொருட்கள்

சங்ககால பெண்கள் தங்களை அழகுப்படுத்திக் கொள்ள பல்வேறு கலைபொருட்கள் பயன்படுத்தினர் என்பதை நெடுநல்வாடை குறிப்பிடுகிறது. அவற்றுள்,

"வெள்ளி வள்ளி வீங்கு இறைப் பணைத் தோள்" (நெடுநல் 36)

"வெள்ளி வள்ளியின் விளங்கு தோள்" (சீவக.சிந்.420)

எனும் பாடலடிகளின் வழி வெண்மையால் சங்கினால் செய்யப்பட்ட வளையல்களைப் பெண்கள் அணிந்திருந்தனர் என்பதை அறியமுடிகின்றது. இதனைக் கொண்டு சங்கினைப் பயன்படுத்தி வளையல்கள் செய்யும் கலைஞர்கள் வாழ்ந்துள்ளதையும் உய்த்துணர முடிகின்றது.

"பூங்குழைக்கு அமர்ந்த ஏந்து எழில் மழைக்கண்" (நெடுநல். 38)

காதிலே அணிந்துள்ள அழகிய காதணிக்கு ஒத்த குளிர்ந்த கண்களையுடையவர் என்றும் கூறப்பட்டுள்ளது சிந்திக்கத்தக்கது மட்டுமல்லாது தமிழர் அழகுகளை ஆராய தக்கதுமாம். மேலும், இரும்பால் செய்யப்பட்ட விளக்கின் நுண்ணிய திரியினை ஏற்றினர் என்பதை,

"இரும்புசெய் விளக்கின் ஈர்ந்திரி கொளீஇ" (நெடுநல். 42)

என்றும், ஆன்புறாவானது கொடுங்கையைத் தாங்கும் பலகையில் நின்றன என்பதை,

"மதலைப் பள்ளி மாறுவன இருப்ப" (நெடுநல். 48)

என்றும் நக்கீரர் கூறியுள்ளார். இதன்வழி காதணி செய்தல், இரும்பில் விளக்கு செய்தல், புறாங்கள் தங்க பலகைகள் அமைத்தல் போன்றவை சங்ககாலத் தமிழர்கள் அறிந்திருந்தனர் என்பதை அறியலாம்.

ஒப்பனை கலை

இன்று மகளிர் பல்வேறு அழகு நிலையங்களுக்குச் சென்று தங்கள் அழகை மெருகேற்ற பல செயற்கையான அழகு சாதனப்பொருட்களைப் பயன்படுத்துகின்றனர். அதனால் பல்வேறு உடல் உபாதைகளும் ஏற்படுகின்றன. ஆனால், சங்ககால மகளிர் தங்களை இயற்கை பொருட்களைக் கொண்டு ஒப்பனை செய்துக்கொண்டுள்ளனர். இதனை, கருமையான அகில மரத்தில் வைரமாகிய பகுதியோடு அயிரையும் சேர்ந்து தமது கூந்தல் வாசம் வீச புகைத்தனர் என்கிறது நெடுநல்வாடை,

"இருகாழ் அகிலொடு வெள்ளயிர் புகைப்பக்"
(நெடுநல் 56)

மேலும்,

"..............................மேம்பட
துணை புணர் அன்னத் தூ நிறத் தூளி
இணை அணை மேம்படப் பாப் அணை இட்டு
.......................................................
அம்மாக ஊர்ந்த அவிர்நூற் கலிங்கமொடு
புனையா ஓவியம் கடுப்ப புனைவு இல்"(நெடுநல். 131-147)

முன்பு அரசமாதேவியின் முத்துக்கள் பதித்துச் செய்யப்பட்ட கச்சுத் தாங்கிய பருத்த முலையைக் கொண்ட மார்பில் குத்தும் தன்மையைக் கொண்ட நீண்ட தாலி நாண் ஒன்று மட்டும் தொங்கிக் கிடந்தது.நலம் விளங்கும் நெற்றிப் பகுதி ஒப்பனை செய்யப்படவில்லை கூந்தல் சிலவாகப் பிரிந்தும் மென்னையாகவும் வறண்டும் காணப்பட்டது.மிக்க ஒளியை வெளிப்படுத்து மகரக் குழை காதுகளில் அணியப் பெறாமையால் அக்காதுகள் சிறிது தாழ்ந்து காணப்பட்டன. அவற்றின் சிறிய துளைகளில் தாளுருவிகள் மட்டும் அழுத்தப்பட்டிருந்தன. முன்பு பொன்னால் செய்த வளையல்களை அணிந்தமையால் ஏற்பட்ட தழும்பினையுடைய மயிர் ஒழுங்கினைக் கொண்ட முன்கைகளில் இப்பொழுது வலம்புரிச் சங்கினை அறுத்துச் செய்யப்பட்ட வளையல் அணிந்து காப்புநாண் கட்டியிருந்தனள்.வாளை மீனின் பிளந்த வாயைப் போன்று விளங்கும் வளைவினையுடைய பெரிய மோதிரம் அணிந்து சிவந்த விரலில் செந்நிறமுடைய நெளி என்னும் மெல்லிய மோதிரம் அணிந்திருந்தனள். முன்பு பூ வேலைப்பாடுகளைக் கொண்ட துகிலை உயர்ந்த வளைவினையுடைய அல்குலில் அணிந்திருந்தனள் இப்பொழுது நூலால் ஆகிய அழகிய ஆடை மாசுபடிந்து உடலில் கிடந்தது.வண்ணங்களைக் கொண்டு ஒப்பனை செய்யாமல் வடிவத்தை மட்டும் கோடிட்டுக் காட்டும் சித்திரத்தைப் போல அரசமாதேவி கட்டிலில் அமர்ந்திருந்தனள் என்கிறது. மேலும்,

தளிர் ஏர் மேனி தாய சுணங்கின்
அம் பணைத் தடைஇய மென் தோள் முகிழ் முலை
வம்பு விசித்து பாத்த வாங்கு சாய் நுகப்பின்"
(நெடுநல். 148-150)

அரசமாதேவியின் கால்கள் கழுவப்படாமலும் செம்பஞ்சுக்குழம்பு பூசப் பெறாமலும் பூண்கள் அணியப் பெறாமலும் இருந்தாள் என்கிறார் நக்கீரர்.

சங்ககால மக்கள் தாங்கள் மட்டும் அணிகலன்களைப் பயன்படுத்தாமல் தாங்கள் வளர்த்த விலங்குகளுக்கும் அணிகலன்களை அணிவித்து அழகுபார்த்துள்ளனர். இதனை,

மணி புறத்து இட்ட மாத்தாட் பிடியொடு
பருமம் களையாப் பாப்பரிக் கலிமா
இருஞ் சேற்றுத் தெருவின் எறிதுளி விதிர்ப்ப(நெடுநல். 178-180)

மணிகளைத் தன்னிடத்தேயுடைய பெரிய தாளினைக் கொண்ட குசை (கடிவாளம்) உடையதும் சேணம் நீக்கப் பெறாததும் பாய்ந்து செல்லும் செலவுடைய செருக்குக்கொண்ட

குதிரைகள் கரிய சேறு பரவிய பாசறைத் தெருக்களில் தம்மீது வீசும் நீர்த் துளிகளை உதறின என்கிறார் நக்கீரர். மேலும்,அரசனின் வெண் கொடை நூலால் கட்டப்பட்ட முத்து மாலைகளைக் கொண்டதாகும். இதனை நக்கீரர், "நூல் கால் யாத்த மாலை வெண்குடை"(நெடுநல்.184) என்கிறார்.

யானை

யானைகள் ஒளிவிளங்கும் முகபடாம் அணிந்து பொலிவுடன் திகழ்ந்தன என்பதை,

"...................................மின் அவிர்
ஒடையொடு பொலிந்த வினை நவில்
யானை"(நெடுநல்.168-169)

எனும் பாடலடிகள் எடுத்தியம்புகின்றன.

கைத்தொழில்

மின்விசிறி எனும் சொல்லே பழந்தமிழர் பயன்பாட்டிலிருந்த விசிறி எனும் சொல்லினை அடியொட்டி உருவாக்கப்பட்டதே ஆகும். மின்விசிறி இல்லாத காலங்களில் மக்கள் கைவிசிறிகளைப் பயன்படுத்துவதை நாம் பார்த்திருப்போம். இதன் தொடக்கமானது சங்ககாலத்தில் காணப்படுகின்றது. இதனை,

"இயங்காத விசிறியும் தாழிட்ட சாயரமும்
கைவல் கம்மியன் கவின்பெறப் புனைந்த"
(நெடுநல் 57-58)

கைவேலைப் பாட்டிலே சிறந்து விளங்கும் தொழிலாளியால் அழகிய விசிறி செய்யப்பட்டது என்பதிலிருந்து அறியமுடிகிறது.

புழங்கு பொருட்கள்

சங்ககால மக்கள் பல்வேறு புழங்குப் பொருட்களை தங்கள் வாழ்வில் பயன்படுத்தியுள்ளனர். அவைகள் பல்வேறு அகழாய்வுகளில கண்டெடுக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் சங்ககால மக்கள் குடத்தை அறிந்திருந்தனர் என்பதை,

"தொகுவாய்க் கன்னல் தண்ணீர் உண்ணார்
பகுவாய்த் தடவில் செந்நெருப்பு ஆர"
(நெடுநல்.65-66)

எனும் பாடலடிகளில், குவிந்த வாயுடைய குடத்திலுள்ள நீரைப் பருகாமல் அகன்ற வாயுடைய தூபமூட்டியில் சிவந்த நெருப்பினை இட்டு வெம்மையை நுகர்ந்தனர் என்பதன் வழி அறியமுடிகின்றது.

யாழ்

தமிழர்களின் மிக முக்கிய இசைக்கருவியும், நீண்ட வரலாறு கொண்டதுமான யாழ் இசைக்கருவியானது தமிழர் இசையில் தனியிடம் பெற்றது. அந்தவகையில் யாழ் கொண்டு இசைமீட்டியவர்களை யாழ்ப்பாணர்கள் என்றனர். இன்றைய இலங்கையில் உள்ள யாழ்ப்பாணமும் யாழ் இசைக்கும் பாணர்கள் வாழ்ந்த காரணத்தால் பெயர் பெற்றது என்கின்றனர் அறிஞர் பெருமக்கள். இந்த யாழினை,

"ஆடல் மகளர் பாடல்கொளப் புணர்மார்
தண்மையின் திரிந்த இன்குரல் தீம்தொடை
கொம்மை வருமுலை வெம்மையால் தடை
கருங்கோட்டுச் சீறியாழ் பண்ணுமுறை
நிறுப்ப" (நெடு.நல்.67-70)

எனும் பாடலடியின் வழி, ஆடல்மகளிர் பாடலை வாசிப்பதற்காக யாழினைப் பொருந்துமாறு செய்தனர். குளிர்ச்சியால் தன்மை வேறுபட்ட யாழின் நரம்பினைத் தம் முலையின் வெப்பத்தால் தடவி அதனை இசைப்பதற்கு ஏற்ற வகையில் முறைபடுத்தினர் எனும் செய்திகளை அறிய இயலுகிறது.

யவனர் விளக்குகள்

யவனர்கள் பாசறை காவலர்களாக இருந்தனர் என்று பல்வேறு சங்கப்பாடல்கள் நமக்கு எடுத்தியம்புகின்றன.

"யவனர் இயற்றிய வினைமாண் பாவை
யைஏந்தும் ஐஅதல் நிறைய நெயசொரிந்து
பருஉததிரி கொளீஇய குரூஉத்தலை நிமிர்எரி
அறுஅறு காலைதோறு அமைவரப் பண்ணிப்
பல்வேறு பள்ளிதொறும் பாய்இருள் நீங்க
(நெடுநல் 101-105)

எனும் அடிகளில், யவனர்களால் சிறந்த வேலைப்பாடுகளுடன் கூடிய கை விளக்கில் அகல் நிறையுமாறு நெய்யினை ஊற்றி பெருத்த திரிகளை ஏற்றினர் பொன்நிறத்தலையோடு மேல் நோக்கி சுடர்விடும் விளக்கில் நெய் குறையும் போதெல்லாம் நெய் ஊற்றி திரியைத தூண்டி விட்டு நன்கு எரியுமாறு செய்தனர். இப்பாவை விளக்கின் ஒளியானது அரண்மனை எங்கும் பரவி இருளினை நீங்கச் செய்தது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை,

"பாவை விளக்கின் பரூஉச் சுடர் அழல" (முல்லை.85)

"வேண்டிடம் தோறும், தூண்டு திரிக் கொளீஇக்
கைவயிற் கொண்ட நெய் அகல் சொறியும்
யவனப் பாவை அணி விளக்கு அழல" (பெருங்கதை, 1:47:173)

எனும் பாடலடிகளும் உறுதிசெய்கின்றன.

வட்டக் கட்டில்

அரசி பயன்படுத்துவதற்கெனவே சிறப்பு வாய்ந்த கட்டில் பயன்பாட்டில் இருந்துள்ளதை,

"தச நான்கு எய்திய பணைமருள் நோன்தாள்
இகல் மீக்கூறும் ஏந்து எழில் வரிநுதல்
........................................................
புடைதிரண்டிருந்த குடத்த இடை திரண்டு
உள்ளி நோன் முதல் பொருத்தி அடி அமைத்து
பேர் அளவு எய்திய பெரும் பெய்ர்ப் பாண்டில்" (நெடுநல். 115-124)

எனும் பாடலடிகளில், நாற்பது ஆண்டுகள் நிரம்பப் பெற்றதும் முரசு போன்ற வலிமை வாய்ந்த திரண்ட கால்களைக் கொண்டதும் போரில் தன்னுடைய ஆற்றலை மிகுத்துக் காட்டும் வலிமையுடையதும் சிறந்த அழகும் புள்ளிகளைக் கொண்ட நெற்றியும் உடையதும் போரில் இறந்துபட்டதும் ஆகிய யானையின் தானே வீழ்ந்த தந்தங்களை எடுத்து அவற்றின் திரட்சியும் செம்மையும் விளங்குமாறு இருபுத்தையும் தச்சன் தன்னுழடய கூர்மை வாய்ந்த சிற்றுளியால் நுட்பமாகச் செதுக்கி வட்டக்கட்டில் உருவாக்கப்பட்டது அக்கட்டில் பெரிய இலை வடிவம் இடையே விளங்குமாறு இயற்றப்பட்டது. சூல் முற்றித் தளர்ந்த இயல்புடைய மகளிரின் பால் முற்றித் திரண்ட முலையைப் போல பக்கம் உருண்டிருக்கும் குடத்தை உடையதாகக் கட்டிலின் கால் அமைந்திருக்கும். குடத்திற்கும் கட்டிலுக்கும் நடுவே உள்ள இடம் உள்ளியின் வேர்ப்பகுதி போல நீண்டு விளங்கக் கட்டிலின் கால்கள் வலியவாய் இயற்றப்பட்டன அக்கட்டில் அகன்ற அளவுடன் உருவாக்கப்பட்டதாகும் பெரும் புகழ் உடையதாக இவ்வட்டக் கட்டில் விளங்குவதாகும் என்பதிலிருந்து அறியமுடிகின்றது.

கட்டிலின் மேல் அமைந்த படுக்கை

தலைவியின் கட்டிலின் மேலே, முத்துக்களைத் தன்னிடத்தே கொண்ட நூல் அழகு விளங்கும் வண்ணம் அக்கட்டிலின் நாற்புறமும் தொங்கலிடப்பட்டது பன்னிறம் ஊட்டப்பட்ட மயிர்க் கற்றைகளை படுக்கையின் நடுவிடத்தே பரப்பி அவற்றின் மேல் சிங்கம் முதலிய விலங்குகளை வேட்டையாடுவது சாளரங்களாக விளங்கும் அத்தகடுகள் ஆணிகளால் தைக்கப்பட்டன. இடமகன்ற காட்டுப் பகுதியில் பூத்த முல்லைப் பூக்களும் அவற்றில் வேறுபாடு புலப்படும்படி ஏனைய பல

பூக்களும் கட்டிலின் மேல் நிரப்பப்பட்டன். கட்டிலின் மேல் இரண்டாய் அமைந்த படுக்கைகள் இணைத்து இடப்பட்டன. மென்மையான துணியால் அவை போர்த்துப்பட்டன. அப்படுக்கைகளின் மேல் தன்னுடைய துணையைப் புணர்ந்த அன்னச் சேவலின் தூய நிறமுடைய நுண்ணிய முடிகள் பரப்பப்பட்டன. அப்படுக்கைகளின் மீது அணைகள் இடப்பட்டன. கஞ்சியில் தோய்த்த மெல்லிய தூய மடிப்புடைய ஆடை அப்படுக்கைகளின் மீது விரிக்கப்பட்டிருந்ததை,

"மடைமாண் நுண்இழை பொலிய தொடைமாண்டு
முத்துடைச் சாலேகம் நாற்றி குத்துறுத்து
..................................................
முல்லைப் பல்போது உறழப் பூ நிரைத்து
மெல்லிதின் விரிந்த சேக்கை" (நெடுநல்.124-131)

எனும் பாடலடிகளின் வழி அறிய முடிகின்றது. மேலும்,

"இணைபட நிவந்த நீல மென் சேக்கையுள்" (கலி.72)

"நலத்தகைப் புலத்தி, பசை தோய்த்து எடுத்துத்
தலைப்புடைப் போக்கித் தண் கயத்து இட்ட
நீரிற் பிரியாப் பருஉத் திரி"(குறுந்.330)

எனும் பாடலடிகளும் கட்டிலின் மேலமைந்த படுக்கையின் சிறப்புகளை எடுத்தியம்புகின்றன.

ஓவியம்

மெழுகு பூசப்பட்ட மேற்கட்டியின் மேல் புதியதாக ஓவியம் தீட்டப்பட்டது. கதிரவன் ஆகாயத்தின்கண் வலிமை வாய்ந்த கொம்புகளைக் கொண்ட ஆட்டின் பெயருடைய மேட ராசி முதலாக ஏனை இராசிகளிலும் சென்று இயங்கும் விரைந்து செல்லும் இயக்கத்தைக் கொண்டவன். அவனுடன் மாறுபட்ட இயக்கமுடையதும் தலைமையுடையதும் ஆகிய திங்கட் செல்வனை உரோகிணி என்னும் நாள் மீன் எஞ்ஞான்றும் விட்டு நீங்காத இயல்பினைக் கொண்டதாகும். அரசமாதேவி உரோகிணியைப் போலத் தானும் தன் கணவனைப் பிரியாமல் வாழும் பேறு பெறவில்லையே என நினைத்து மெழுகு செய் படத்தில் தீட்டப்பெற்ற அக்காட்சியைக் கண்டு பெருமூச்செறிந்தனள். இதனை,

புதுவது இயன்ற மெழுகு செய் படமிசை
திண் நிலை மருப்பின் ஆடு தலையாக
...........................................
மா இதழ் ஏந்திய மலிந்து வீழ் அரிப்பனி
செவ்விரன் கடைக்கண் சேர்த்தி சில தெறியா(நெடுநல். 159-165)

மேலும்,

"வரை கண்டனை தோன்றல வரை சேர்பு
வில் கிடந்தன்ன னொடிய பல் வயின்
................................................
உருவப் பல்பூ ஒருகொடி வளைஇ
கருவொடு பெயரிய காண்புஇன் நல்இல்" (நெடுநல். 108-114)

அந்தப்புரப் பகுதிகள், மலைகளைக் காண்பது போன்ற உயர்ந்த தோற்றம் உடையவை. மலைகளைச் சார்ந்து வானவில் கிடப்பது போலப் பலநிறக் கொடிகள், அம்மாடங்களில் தொங்கி அசையும், அந்தப்புரத்தில் பல இடங்கள், வெள்ளியைப் போன்ற சாந்தினால் பூசப்பட்டவை. அவை, நீல மணியைக் காண்பது போன்ற கரிய, திரண்ட, வலிமை வாய்ந்த தூண்களைக் கொண்டவை. செம்பினால் உருவாக்கப்பட்டது போன்ற, தொழில் திறன் விளங்கும்படி அமைக்கப்பட்ட நீண்ட சுவர்களை உடையவை. அவற்றில் பல நிறப் பூக்களோடு கூடிய வல்லிக்கொடி, அழகுபெறச் சுற்றிலும் ஓவியமாகத் தீட்டப்பட்டிருக்கும்.காண்பதற்கு இனிமையாக விளங்கும் நன்மை வாய்ந்த

அவ்வந்தபுரம், கருத்தங்கும் இல்லம் எனப் போற்றப்பெறுவதாகும்.

சிற்பக்கலை

நக்கீரர், நெடுநல்வாடையில் பாண்டிமாதேவி படுத்திருந்த கட்டிலின் மேல் விதானத்துத் திரைச்சீலையில் மெழுகு வழித்து, ஓவியம் தீட்டியிருந்ததைக் குறிப்பிடுகிறார். அதில் மேடராசியில்ஞாயிறு திரியும் காலத்தில் திங்களஞ் செல்வனுடன் உரோகிணி மகிழ்ந்திருக்கும் காட்சி வரையப்பெற்றிருந்தது. இவ்வோவியக் காட்சி தேவியின் உள்ளத்தை உருக்கியது. மேலும் நக்கீரர்க்கு ஓவியம், சிற்பம் ,கட்டிடக் கலை ஆகியவற்றில் ஈடுபாடு இருந்தமை நெடுநல்வாடையால் உணரப்படுகிறது. வகுத்துக்கட்டப்பட்ட முறையை, அது கால்கோள் செய்யப்பட்ட நாள் முதலாக எடுத்துரைக்கிறார்.அரண்மனை வாயில் முற்றம், அந்தப்புரத்தின் அமைப்பு, அரசி படுத்திருக்கும் வட்டக் கட்டில்,அதன்விதானம், படுக்கையின் அமைப்பு யாவும் சிற்ப உத்தித் திறனோடு புனையப்பட்டுள்ளன. கட்டிற்காலில் உருண்டு திரண்டிருக்கும் குடம் போன்ற உறுப்பைத்

"தூங்கு இயல் மகளிர் வீங்குமுலை கடுப்பப்
புடைதிரண் டிருந்த குடத்த..............."
(நெடுநல்.120-121)

என்று நுட்பமாக விளக்குகிறார். அசையும் நடையினை உடைய மகளிர் என்பதனால் கருக்கொண்டமகளிர் என்பதைக் குறிப்பாக உணர்த்தியிருக்கும் அழகிலேயே சிற்ப நுட்பம் உளதன்றோ? பாண்டியனுக்கு முன்னதாகப் பாசறைக்கண் நள்ளிரவில் தீவட்டி பிடித்துச் செல்லுகையில் வாடைக்காற்று வீசுவதால் அதன் சுடர் தெற்கே சாய்ந்து எரிவதையும் நக்கீரர் குறிப்பிடுகிறார்.

பாண்டில் விளக்கில் பரூஉச்சுடர் அழல
(நெடுநல். 175)

இக்காட்சியும் சிற்பத் திறனை நுட்பமாகக் குறிப்பிடுவதாகும். இங்கனம் வரும் பல பகுதிகளைநோக்கும் பொழுது நெடுநல்வாடையைச் சிற்பப் பாட்டு' என்றே அழைக்கலாம் எனத் தோன்றுகிறது.

முடிவுரை

சங்கத் தமிழர் கட்டிடக்கலையில் தலைசிறந்து விளங்கியுள்ளனர். தங்கள் வீடுகளில் உயர் மாடம், பலகணி, வலிமை வாய்ந்த கதவுகள், அகன்ற வீதிகள், தெய்வங்கள் வீற்றிருக்கும் வாயில்கள், மதில், முற்றம், முன்வாயில், நீர் செல்லு் குழாய்கள் குறித்தும் கட்டிடக்கலை அறிவியல் குறித்தும் அறிந்து கட்டிடங்கலை அமைத்துள்ளனர். கலைகள் பல கற்றுத் தேர்ந்தவர்களாய் தமிழர்கள் இருந்துள்ளார்கள் என்பதை, காதணி செய்தல், இரும்பில் விளக்கு செய்தல், புறாங்கள் தங்க பலகைகள் அமைத்தல் போன்றவை சங்ககாலத் தமிழர்கள் அறிந்திருந்தனர் என்பதன்வழி அறிகின்றோம். முத்துக்கள் பதித்துச் செய்யப்பட்ட கச்சுகள் பெண்களின் முலைகளைத் தாங்க பயன்படுத்தப்பட்டன. தாலி என்பது நடைமுறையில் இருந்துள்ளது. தாலி செய்யவும் அறிந்திருந்திருக்கின்றனர்.மகரக் குழை எனும் காதணி அணிந்திருக்கின்றனர். பொன்னாலும சங்காலும் வளையல்கள் செய்யப்பட்டுள்ளன. பெரிதும் சிறியதுமாகிய மோதிரங்களைப் பயன்படுத்தியுள்ளனர். அல்குலை மறைக்கவும் ஆபரணத்தைப் பயன்படுத்தியுள்ளனர். கால்களில் பூண்கள் அணிந்துள்ளனர். குதிரையின் கடிவாளத்தில் மணிகள் பதிக்கப்பட்டுள்ளன. யானைகளுக்கு ஒளிவிளங்கும் முகபடாம் அணிவிக்கப்பட்டிருக்கின்றது. அரசனின் வென்கொற்ற கொடை முத்து மாலைகளைக் கொண்டிருந்துள்ளது என்பதையெல்லாம் அறியமுடிகின்றது. விசிறி, குடம், யாழ், யவர்

விளக்குகள், கட்டில், படுக்கை உள்ளிட்ட புழங்கு பொருட்களைக் குறித்து அறிந்துள்ளனர். ஓவியம், சிற்பக்கலை ஆகியவற்றையும் அறிந்ததோடு மட்டுமன்றி பேணி பாதுகாத்துள்ளனர் என்பதை இக்கட்டுரையின்வழி அறியப்பட்டது.

**துணைநூற்பட்டியல்**


1. இராசேந்திரன். பொ, சாந்தலிங்கம். சொ, 2014கோயிற்கலை, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
2. கிங்ஸ்லி தே ஜோஸ். சி., முல்லைப்பாட்டில் கட்டிடக்கலை நுட்பங்கள், பிரணவ் நுண்கலை ஆய்விதழ், Vol:2, Issue:2, Special Issue, ISSN:2582-9513.
3. சோமசுந்தரனார் பொ.வெ., 1970 பெருங்கதை, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
4. டயானா ஜெயந்தி மோ, ஜெயஸ்ரீ கு.ச., நெடுநல்வாடை உணர்த்தும் பாசறை நிலை, சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், Vol:4, Issue:2, 2022, DOI:10.34256/irjt22234
5. தனலட்சுமி. ச, தமிழர் கட்டிடக்கலை, பிரணவ் தமிழியல் ஆய்விதழ், Vol:2, Issue:1, Feb. 2023 ISSN:2582-9599.
6. திருத்தக்கதேவர், 2015 சீவகசிந்தாமணி மூலமும் உரையும், சாரதாபதிப்பகம், சென்னை.
7. நச்சினார்க்கினியர் (உரை), 1931 நெடுநல்வாடை மூலமும் உரையும், கேசரி அச்சுக்கூடம்.
8. பரிமணம், அ.மா. பாலசுப்பிரமணியன் கு.வெ. (த.ப.ஆ) 2004 அகநானூறு மூலமும் உரையும் , நியூ செஞ்சுரி வெளியீடு, சென்னை - 600 098.
9. பரிமணம், அ.மா. பாலசுப்பிரமணியன் கு.வெ. (த.ப.ஆ) 2004 கலித்தொகை மூலமும் உரையும் , நியூ செஞ்சுரி வெளியீடு, சென்னை - 600 098.
10. பரிமணம், அ.மா. பாலசுப்பிரமணியன் கு.வெ. (த.ப.ஆ) 2004 குறுந்தொகை மூலமும் உரையும் , நியூ செஞ்சுரி வெளியீடு, சென்னை - 600 098.
11. பரிமணம், அ.மா. பாலசுப்பிரமணியன் கு.வெ. (த.ப.ஆ) 2004 பத்துப்பாட்டு மூலமும் உரையும் , நியூ செஞ்சுரி வெளியீடு, சென்னை - 600 098.
12. பார்த்தசாரதி. நா.,1992பழந்தமிழர் கட்டகக் கலையும் நகரமைப்பும், தமிழ்ப்புத்தகாலயம் சென்னை.
13. புலியூர் கேசிகன் (உரை), 2021 சிலப்பதிகாரம் மூலமும் உரையும், ஸ்ரீபாரதி பதிப்பகம், சென்னை.
14. முருகு ராஜேந்திரன், 2005 மனையடி சாஸ்திரம், பாரதி பதிப்பகம், சென்னை.
15. ராஜேஷ். பா, நெடுநல்வாடையில் தமிழர் கட்டிடக்கலை, பிரணவ் நுண்கலை ஆய்விதழ், Vol:2, Issue:2, Special Issue, ISSN:2582-9513
16. வேங்கடசாமி, மயிலை.சீனி, 2002 தமிழர் வளர்த்த அழகுக் கலைகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
17. Deepak. A., Tamil Architecture Technology, Indian Journal of Multilingual Research and Development, Vol 5, Iss 2, (2024).